அறிக்கையிடப்படக்கூடியது

இந்திய உச்ச நீதிமன்றம்

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு

உரிமையியல் மேல்முறையீட்டு எண் 3500/2018

சி.அ.ம. (உரிமையியல்) எண் 26401/2017-லிருந்து எழுகிறது

சோட்டன்பென் மற்றும் ஒருவர் ... மேல்முறையீட்டாளர்(கள்)

எதிர்

கிரித்பாய் ஜல்கிருஷ்ணபாய் தாக்கர்

மற்றும் பலர் ... எதிர்மேல்முறையீட்டாளர்(கள்)

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. ஏ.எம். கன்வில்கர்:

1. இம்மேல்முறையீடானது, உரிமையியல் சீராய்வு விண்ணப்ப எண் 76/2016-இல் அகமதாபாத்திலுள்ள குஜராத் உயர் நீதிமன்றத்தின் 2017-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 13-ஆம் நாளிட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவுக்கு சிறப்பு அனுமதி மூலம் எதிர்ப்புத் தெரிவிக்கிறது.

2. மேல்முறையீட்டாளர்கள், 2013-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 18-ஆம் நாளன்று அனந்த் முதன்மை முதுநிலை உரிமையியல் நீதிமன்றம் முன்பாக, எதிர்மேல் முறையீட்டாளருக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளைக்காக முறையான உரிமையியல் வழக்கு எண் 166/2015 (பழைய எண் சிறப்பு உரிமையியல் வழக்கு எண் 193/2013) என்ற உரிமை வழக்கைத்

தாக்கல் செய்தனர். மேல்முறையீட்டாளர்களும், 1 மற்றும் 2-ஆம் அசல் பிரதிவாதிகளும், தங்களின் முன்னுரிமையரானவரும் (தந்தை), இறந்தவருமான பாவாமியா கமாலுதீன் சையத், புல எண் 113/ 1 + 2, பரப்பு ஹெறச்.1-37-59 அரா, ஆகர் ரூ. 15-81 பைசா என்ற மூதாதையர்வழிச் சொத்தை மரபுரிமையாகப் பெற்று, அதனுடைய கூட்டுரிமையும், சுவாதீனமும் கொண்டிருந்தனர்.அனந்த் மாவட்டம், உறட்குட் தாலுக்கா, மௌஜ் கிராமத்தில் அமைந்துள்ள நிலம், பழைய உரிமைப்படியான விவசாய நிலமாகும்.மேற்படியான மூதாதையர்வழியான, கூட்டு, பிரிக்கப்படாத நிலம், மேல்முறையீட்டாளர்களாலும் (வாதிகள்), 1 மற்றும் 2-ஆம் அசல் பிரதிவாதிகளாலும், (2 முதல் 15 வரையிலான எதிர்மேல்முறையீட்டாளர்களின் முன்னுரிமையர்கள்), அவர்களின் தந்தையார் பாவாமியா கமாலுதீன் சையத்தின் இறப்பிற்குப் பிறகு, அவரது நேரடி வாரிசுகளால், கூட்டாக உடைமை கொள்ளப்பட்டு, புழங்கப்பட்டு, அனுபவிக்கப்பட்டு வந்தது.மேல்முறையீட்டாளர்களின் பெயர்களோடு சேர்த்து, ஜஉறாங்கீர்மியா பாவாமியா கமாலுதீன் சையத் மற்றும் உஹுசைன்மியா பாவாமியா கமாலுதீன் சையதின் (1 மற்றும் 2-ஆம் முறையேயான அசல் பிரதிவாதிகள்) பெயர்களும் உரிமை ஆவணங்களில் பதிவு செய்யப்படவேண்டியிருந்தது. அக்காலம் முதல் அவர்களனைவரும் பிரிக்கப்படாத நிலத்தின் உடைமையிலும், புழங்குரிமையிலும் கூட்டாக இருந்தனர் என்ற கூற்றின்பேரில் உரிமை வழக்கிற்குட்பட்ட விசயப்பொருள் உள்ளது.மேல்முறையீட்டாளர்கள் சொத்தில் பாதி (1/2) பங்கு உரிமைகள், அதிகாரங்கள், உடைமை மற்றும் புழங்குரிமைகள் கொண்டுள்ளதாக உறுதிபடக் கூறினர். 1 மற்றும் 2-ஆம் அசல்

பிரதிவாதிகள், அவர்களுக்கு (மேல்முறையீட்டாளர்களுக்கு) தெரியாமலே அவர்களின் கையொப்பங்களை மோசடியாகப் புனைந்து, மேற்படி நிலத்தை உரிமைமாற்றம் செய்துவிட்டனர் என்பது அவர்களுடைய வழக்கு விவரமாகும்.மேற்படி நடவடிக்கையானது, 1996-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 18-ஆம் தேதியிட்ட, பதிவு செய்யப்பட்ட விற்பனையாவண எண் 4425 மூலம் செயற்படுத்தப் பட்டதைக் குறித்து மேல்முறையீட்டாளர்கள் ஏதும் அறிந்திருக்கவில்லை, அதை அவர்கள், தங்கள் சமூகத்தைச் சார்ந்த நபர்களிடமிருந்து அறிந்து கொண்டனர், அதன்பிறகு, அவர்கள், அனந்திலுள்ள சார்-பதிவாளர் அலுவலகத்தில் விசாரித்தனர்மேற்படி நடவடிக்கையானது, 1996-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 18-ஆம் தேதியிட்ட, பதிவு செய்யப்பட்ட விற்பனையாவண எண் 4425 மூலம் செயற்படுத்தப் பட்டதைக் குறித்து மேல்முறையீட்டாளர்கள் ஏதும் அறிந்திருக்கவில்லை, அதை அவர்கள், தங்கள் சமூகத்தைச் சார்ந்த நபர்களிடமிருந்து அறிந்து கொண்டனர், அதன்பிறகு, அவர்கள், அனந்திலுள்ள சார்-பதிவாளர் அலுவலகத்தில் விசாரித்தனர். நிலமானது, ஏற்கெனவே, 1996-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 18-ஆம் தேதியிட்ட, பதிவு செய்யப்பட்ட விற்பனை ஆவணம் மூலம் 4, 5 மற்றும் 6-ஆம் பிரதிவாதிகள் (முறையே அனில்பாய் ஜெய்கிருஷ்ணபாய் ஜெரஜானி, கீர்த்திபாய் ஜெய் கிருஷ்ணபாய் தாக்கர் மற்றும் கேகன்பாய் ஜெய்கிருஷ்ணபாய் தாக்கர்) ஆகியோர் சார்பாக உரிமைமாற்றஞ்செய்யப்பட்டுள்ளதாக அவர்களிடம் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் உடனடியாக, பதிவு செய்யப்பட்ட விற்பனையாவணத்தின் சான்றிட்ட நகலுக்காக விண்ணப்பித்தனர்.ஜெய்கிருஷ்ணபாய் பிரபுதாஸ் தாக்கர் இறந்துவிட்டதால், வாரிசுகளான 3 முதல் 6 வரையிலான

பிரதிவாதிகள் நிலத்தைப் பெற்றுக் கொண்டனர் என்றும் அவர்களிடம் சொல்லப்பட்டது. பிறகு, பிக்கன்ஷா பிரஷா திவான் முன்னிலையில், சாட்சிகளாக தங்களின் பெருவிரல் பதிவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டன என்பதை அவர்கள் பதிவு செய்யப்பட்ட விற்பனையாவணத்திலிருந்து அறிந்துகொண்டனர் என்று கூறப்படுகிறது. அவர்கள் எந்தச் சாட்சியின் முன்னிலையிலும், எவ்விதத்திலும், அத்தகைய ஆவணம் எதிலும் தங்களின் பெருவிரல் பதிவுகளையோ அல்லது கையொப்பமோ ஒருபோதும் இடவில்லை எனக் கூறினர். பிறகு, ஏதோசில நபர்கள் விற்பனையாவணத்தில் பெருவிரல் பதிவினை வைப்பதற்காக மோசடியாக ஈடுபட்டுள்ளனர் என்று கூறப்படுகிறதுமேலும் விற்பனையாவணத்திலுள்ள பெருவிரல் பதிவுகள் தங்களுடைய தல்ல என்றும், அதிகாரிகளின் முன்னிலையில் தங்களுடைய உண்மையான பெருவிரல் பதிவுகளை வைத்து, அப்பொருண்மையை நிரூபிப்பதற்கு அவர்கள் தயாராகவும், விருப்பமுடனுமிருப்பதாகவும் உறுதிபடக் கூறியுள்ளனர். வழக்குரையின் 4-ஆவது பத்தியை மீண்டும் எடுத்தளிப்பது தொடர்புடையதாய் இருக்கலாம், அது இவ்வாறு எடுத்தியம்பப்படுவதாவது:

> “4. 1-ஆவது பத்தியிலுள்ள சொத்து, மனுதாரர்களாலும், 1 மற்றும் 2-ஆம் எதிர் மனுதாரர்களாலும் கூட்டாக உடைமை கொள்ளப்பட்டு, கூட்டுப் பங்களிக்கப்பட்டு, கூட்டுப் புழங்குரிமையிலும், சுவாதீனத்திலுமிருந்து வரப்படுகிறது.1 மற்றும் 2-ஆம் எதிர் மனுதாரர்கள் தங்களுடைய சயவிருப்பத்தின் பேரில் சொத்தினை விற்க எந்த உரிமைகளும் கொண்டிருக்கவில்லை. 1 மற்றும் 2-ஆம் எதிர்மனுதாரர்கள் சொத்தை விற்க விருப்பம்

கொள்ளும் நேர்வில், அவர்கள், எங்களுடைய ஒப்புதலைப் பெறவேண்டியவர்களாவர். 1 மற்றும் 2-ஆம் எதிர்மனுதாரர்கள் இதை நன்கு அறிந்திருந்தனர் என்றாலும், அவர்கள் சட்டவிரோதமான முறையில் சொத்திற்கான விற்பனையாவணத்தை எழுதியுள்ளனர். ஆனால் வழக்குச் சொத்தின் உண்மையான சுவாதீனமும், புழங்குரிமையும், எங்களால் கூட்டாக மேற்கொள்ளப்பட்டுவருகிறது .இரண்டு நாட்களுக்கு முன்பு, மனுதாரர்கள், எதிர் மனுதாரர்களை சந்தித்து, நிலத்தின் மீதான இவ்வுரிமைகளைத் தடுக்கவோ, தொல்லைக்கொடுக்கவோ வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டனர். எங்களுடைய பாதி பங்கினை பிரித்துக் கொடுத்து, நிலத்தின் உண்மையான உடைமையை வழங்குமாறு எதிர்மனுதாரர்களை நாங்கள் கேட்டுக் கொண்டபோதிலும், எதிர்மனுதாரர்கள் இந்த வேண்டுகோளைப் பரிசீலிக்கவில்லை. அதற்கு மாறாக, 2 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்கள் சொத்தை எவருக்காவது விற்று கொள்ளட்டும் என்றும், நீதிமன்றங்கள் திறந்து இருக்கின்றன என்றும் நம்மால் என்ன நடவடிக்கைகள் எடுக்கமுடியுமோ, அதை நாம் எடுத்துக்கொள்ளலாம் என்றும் அவர்களால் கூறப்பட்டது. "

3. வழக்குரையின் 6-ஆவது பத்தியில், மேல்முறையீட்டாளர்கள், உரிமை வழக்கு தாக்கல் செய்வதற்கான வழக்குமூலம் குறித்து தெரிவித்துள்ள கூற்றுகள் பின்வருமாறு:

"6. உரிமை வழக்கு தாக்கல் செய்ததற்கான காரணமாவது, மேற்குறிப்பிடப்பட்ட பத்தியின் கீழ் குறிப்பிடப்-பட்டவாறு, 1 மற்றும் 2-ஆம் எதிர்மனுதாரர்கள், மனுதாரர்களுக்கு தெரியாமல், அவர்கள் அறியாவண்ணம், அவர்களுடைய பெயர்களை உரிமை ஆவணங்களிலிருந்து நீக்கி, மனுதாரர்களுக்கு தெரியாமல் 18.10.1996-ஆம் தேதியிட்ட விற்பனையாவண எண் 4425-ஐ பதிவுசெய்து கொண்டனர். மேற்குறிப்பிட்டதைப் பற்றி அறிய வந்ததும், மனுதாரர்கள், இரண்டு நாட்களுக்கு முன்பு, எதிர்மனுதாரர்களை நேரடியாக சந்தித்து, விற்பனையாவணத்தை இரத்து செய்யு மாறும், சொத்தை எந்த இடையூறின்றி விற்பனைக்குரியதாகவும் மற்றும் உள்ளபடியான காலி உடைமையாகவும் தங்களிடம் ஒப்படைக்குமாறும், அவர்களை (எதிர்மனுதாரர்களை) வேண்டிக்கொண்டனர். அப்படியிருந்தும் எதிர்மனுதாரர்கள் வேண்டுகோளைப் பரிசீலிக்காமல், நீதிமன்றங்கள் எங்களுக்காக திறந்திருக்கின்றன, அதன்மூலம் மனுதாரர்களாகிய நாங்கள் எதைச் செய்ய விரும்புகிறோமோ, அதைச் செய்வதற்கு எங்களைக் கேட்டுக் கொண்டனர். ஆகவே, தற்பொழுதைய பிரச்சனை, உறட்குட் கிராமத்தில் மாண்பு மிகு நீதிமன்றத்தின் ஆள்வரையின்றி எழுந்துள்ளது."

4. மேற்குறிப்பிடப்பட்டவாறு, உரிமை வழக்கு, விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளைக்காகவும் மற்றும் பின்வரும் பரிகாரங்களுக்காகவும் தாக்கல் செய்யப்பட நேர்ந்தது:

"அ) அனந்த் மாவட்டம், உறட்குட் தாலுக்கா, மௌஜ் கிராமத்தில் அமைந்துள்ள புல எண் 113/ 1 + 2, ஊறக்டேர் பரப்பு 1-37-59 அரா, ஆகர் ரூ.15-81 பைசா என்று 1-ஆவது பத்தியில் குறிப்பிடப்பட்ட சொத்தான பழைய உரிமைப்படியான விவசாய நிலமானது மனுதாரர்களின் மூதாதையர் வழிச் சொத்தாகும் என அறிவித்து, அதன்படி, மனுதாரர்கள், சொத்தில், பிரிக்கப்படாத 1/2 (அரை) பாகத்தின் பங்கில் பாத்தியதை கொண்டுள்ளனர் மற்றும் நிலத்தின் பாகப்பிரிவினையானது, நீதிய முறையில் மேற்கொள்ளப்பட்டு, உள்ளபடியான சுவாதீனம், புழங்குரிமை முதலியவற்றை, நீதியின் நலனுக்குகந்த வகையில் மனுதாரர்களுக்கு வழங்கப்படவேண்டும் என்பதை மாண்புமிகு நீதிமன்றம் தயைகூர்ந்து அறிவிக்கவேண்டும்.

ஆ) மனுதாரர்களும், 1 மற்றும் 2-ஆம் எதிர் மனுதாரர்களும் பயன்படுத்திவரும் சொத்தானது அனந்த் மாவட்டம், உறட்குட் தாலுக்கா, மௌஜ் கிராமத்திலுள்ள புல எண் 113/ 1 + 2, ஊறக்டேர் பரப்பு 1-37-59 அரா, ஆகர் ரூ.15-81 பைசா என்ற மூதாதையர்வழி, கூட்டு, பிரிக்கப்படாத, கூட்டுடைமையான பழைய உரிமைப்படியான விவசாய நிலமாகும், அதன்படி 1 மற்றும் 2-ஆம் எதிர்மனுதாரர்கள் மட்டும் சொத்தை விற்பதற்கோ அல்லது அதன் உரிமைமூலத்தில் குறுக்கிடுவதற்கோ, உரிமைகளோ, அதிகாரமோ பெற்றிருக்கவில்லையென்று அறிவிக்கவும், மேலும், 4

மற்றும் 6-ஆவது எதிர்மனுதாரர்களின் சார்பாக, 18.10.1996-ஆம் தேதியிட்ட, பதிவு செய்யப்பட்ட விற்பனையாவண எண் 4425 முற்றிலும் செல்லாதது, தொடக்கத்திலிருந்தே செல்லாதது, இரத்து செய்யப்பட வேண்டியது, பொய்யானது மற்றும் அற்பத்தனமானது என்பதை மாண்புமிகு நீதிமன்றம் உளமாற அறிவிக்கவும், அதன்படி, 3 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்கள், இக்குறிப்பிட்ட விற்பனையாவணம் அடிப்படையில் நிலம் தொடர்பான எவ்விதமான உரிமைகளோ, அதிகாரங்களோ பெறமாட்டார்கள் என நீதியின் நலனுக்குகந்தநிலையில் மாண்பு மிகு நீதிமன்றம் மேலும் தயைகூர்ந்து அறிவிக்கவேண்டும்.

இ) எதிர்மனுதாரர்களோ அல்லது அவர்களது முகவர்கள், பணியாளர்கள், நபர்கள், இன்ன பிறர் மூலமாகவோ 1-ஆவது பத்தியில் குறிப்பிடப்பட்ட சொத்தான, அனந்த் மாவட்டம், உறட்குட் தாலுக்கா, மௌஜ் கிராமத்தில் அமைந்துள்ள புல எண் 113/ 1 + 2, டெறக்டேர் பரப்பு 1-37-59 அரா, ஆகர் ரூ.15-81 பைசா பழைய உரிமைப்படியான விவசாய நிலத்தை விற்கவோ, அடைமானம் வைக்கவோ, பொறுப்பேற்கவோ, பற்றுரிமையோ, இன்ன பிறவற்றையோ ஒருபோதும் செய்யக்கூடாது என்பதாக மனுதாரர்களுக்கு ஆதரவாகவும், எதிர்மனுதாரர்களுக்கு எதிராகவும் மாண்புமிகு நீதிமன்றம் தயைகூர்ந்து நிரந்தர உறுத்துக் கட்டளை ஒன்றைப் பிறப்பிக்கவேண்டும்.

ஈ) எதிர்மனுதாரர்களோ அல்லது அவர்களது முகவர்கள், பணியாளர்கள், நபர்கள், இன்ன பிறர் மூலமாகவோ, 1-ஆவது பத்தியில் குறிப்பிடப்பட்ட சொத்தான, அனந்த் மாவட்டம், உறட்குட் தாலுக்கா, மௌஜ் கிராமத்தில் அமைந்துள்ள புல எண் 113/ 1 + 2, உறக்டேர் பரப்பு 1-37-59 அரா, ஆகர் ரூ.15-81 பைசா பழைய உரிமைப்படியான விவசாய நிலத்தின் மீது மனுதாரர்களின் மூதாதையர்வழியான, கூட்டான, பிரிக்கப்படாத சுவாதீனம், புழங்குரிமை, இன்ன பிறவற்றில் ஒரு போதும் குறுக்கிடவோ, தடைசெய்யவோ, இடையூறு செய்யவோ கூடாது என்பதாக மனுதாரர்களுக்கு ஆதரவாகவும், எதிர்மனுதாரர்களுக்கு திராகவும், மாண்புமிகு நீதிமன்றம் தயைகூர்ந்து நிரந்தர உறுத்துக்கட்டளை ஒன்றைப் பிறப்பிக்கவேண்டும்.

உ) எதிர் மனுதாரர்களோ அல்லது அவர்களது முகவர்கள், பணியாளர்கள், நபர்கள், இன்ன பிறர் மூலமாகவோ, 1-ஆவது பத்தியில் குறிப்பிடப்பட்ட சொத்தான, அனந்த் மாவட்டம், உறட்குட் தாலுக்கா, மௌஜ் கிராமத்தில் அமைந்துள்ள புல எண் 113/ 1 + 2, உறக்டேர் பரப்பு 1-37-59 அரா, ஆகர் ரூ.15-81 பைசா பழைய உரிமைப் படியான விவசாய நிலத்தின்மீதான ஆவண பதிவு உரிமைகளை ஒருபோதும் மாற்றக் கூடாது என்பதாக மனுதாரர்களுக்கு ஆதரவாகவும், எதிர்மனுதாரர்களுக்கு

எதிராகவும், மாண்புமிகு நீதிமன்றம் தயைகூர்ந்து நிரந்தர உறுத்துக் கட்டளை ஒன்றைப் பிறப்பிக்கவேண்டும்.

ஊ) மாண்புமிகு நீதிமன்றத்தால், முறையானதாகவும், பயன்தரத்தக்கதாகவும் கருதப்படுகின்ற உரிய உத்தரவொன்றை மாண்பு மிகு நீதிமன்றம் தயைகூர்ந்து பிறப்பிக்கவேண்டும்.

எ) எதிர்மனுதாரர்கள், வழக்கிற்குரிய செலவுத் தொகையை வழங்குவதற்கு மாண்புமிகு நீதிமன்றம் தயைகூர்ந்து அவர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கவேண்டும்.

5. உரிமை வழக்கு தாக்கல் செய்த பிறகு, வழக்குச் சொத்து தொடர்பான, 1 மற்றும் 2-ஆவது அசல் பிரதிவாதிகளால் எழுதிக்கொடுக்கப்பட்ட அசல் ஆவணத்தை, நீதிமன்றம் முன்பாக முற்படுத்தவும், மேல்முறையீட்டாளர்களின் ஒப்புக்கொள்ளப்பட்ட பெருவிரல் பதிவைப்பெற்று, உண்மையை வெளிக்கொண்டு வருவதற்கு அதை அறிவியல்பூர்வமான ஆய்வுக்கும், கையெழுத்து நிபுணரால் பெருவிரல் பதிவுகள் ஒப்பீடு செய்யப்படுவதற்கும் அவற்றை அனுப்புவதற்கும், 3 முதல் 6 வரையிலான பிரதிவாதிகளுக்கு கட்டளை இடுவதற்கு, உரிமையியல் விசாரணைமுறைச் சட்டம், 1908 (சுருக்கமாக " உ.வி.மு.ச. "), கட்டளைகள் 13 மற்றும் 16 உடனிணைந்த சாட்சியச் சட்டம், பிரிவுகள் 67 மற்றும் 71-இன் கீழ் 2014-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 19-ஆம் நாளன்று விண்ணப்பமொன்று தாக்கல் செய்யப்பட்டது. அதனை எதிர்த்து, 4 முதல் 6 வரையிலான அசல் பிரதிவாதிகள் அவ்விண்ணப்பத்திற்கு பதிலுரையை, 2015-ஆம் ஆண்டு பிப்ரவரி

திங்கள் 3-ஆம் நாளன்று தாக்கல் செய்தனர். அதன்பின்னர், 5-ஆவது பிரதிவாதி (1-ஆவது எதிர்மேல்முறை யீட்டாளர்), உரிமை வழக்கு 17 ஆண்டுகளுக்குப் பிறகு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், அது காலவரையறையால் தடை செய்யப்படவேண்டும் என்ற காரணத்தின்பேரில் வழக்குரையை நிராகரிப்பதற்காக கட்டளை 7, விதி 11 (டி) -இன் கீழ் விண்ணப்பமொன்றை 2015-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17-ஆம் நாளன்று தாக்கல் செய்தார். மேல்முறையீட்டாளர்கள் அவ்விண்ணப்பத்திற்கு பதிலுரையைத் தாக்கல் செய்தனர். கட்டளை 13, விதி 16-இன் கீழும் மற்றும் கட்டளை 7, விதி 11 (டி) -இன் கீழும் இரு விண்ணப்பங்களும் அனந்த் 4-ஆவது மாவட்ட நீதிபதியால் 2016-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 20-ஆம் நாளன்று தனித்தனி உத்தரவுகள் மூலம் முடிவு செய்யப்பட்டன.

வாதிகளால் (மேல்முறையீட்டாளர்கள்) தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தைப் பொறுத்தவரையில், நீதிமன்றம் பின்வரும் உத்தரவைப் பிறப்பித்து, அதனை அனுமதித்தது.

"உத்தரவு

விண்ணப்பம் இதன்மூலம் அனுமதிக்கப்படுகிறது.

பிரதிவாதிகள், நீதிமன்றத்தில் 18.10.1996-ஆம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட விற்பனையாவண எண் 4425-ஐ முற்படுத்த பணிக்கப்படுகின்றனர். மேலும் உரிமையியல் நீதிமன்றம், விதிகளின்படி, வாதிகளின் மாதிரி பெருவிரல் பதிவை எடுக்கவும், மேலும், அந்த விற்பனை ஆவணத்தை,

மாதிரி பெருவிரல் பதிவுகளுடன் சேர்த்து, அந்த விற்பனையாவணத்திலுள்ள சாட்சிகளின் பெருவிரல் பதிவையும் அனுப்பி, அவை வாதிகளுடையனவா, இல்லையா என்பதைப் பார்க்கவும் பணிக்கப் படுகிறது.

மேலும், பெருவிரல் பதிவு நிபுணர் " ஆவணங்களைப் பெற்ற 30 நாட்களுக்குள் அவரது அறிக்கையைச் சமர்ப்பிக்கப் பணிக்கப்படுகின்றார். "

6. வழக்குரையை நிராகரிப்பதற்காக 5-ஆவது பிரதிவாதியால் (1-ஆவது எதிர்மேல்முறையீட்டாளர்) தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தைப் பொறுத்த வரையில், மேற்படி விண்ணப்பம், அதே நாளன்று அதாவது, 2016-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 20-ஆம் நாளன்று விசாரணை நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. வழக்குரையிலுள்ள கூற்றுகளைப் பரிசீலிக்கையில் உரிமை வழக்கு காலவரையறையால் தடைசெய்யப்படுகின்றது என்ற வாதக்கூற்று விசாரிக்கத்தக்க பிரச்சனையாக இருப்பதால் வழக்குரையை நிராகரிப்பதற்காக 5-ஆவது பிரதிவாதியால் (1-ஆவது எதிர் மேல்முறையீட்டாளர்) வலியுறுத்தப்பட்ட வாதுரையானது நிலைக்கத்தகாததாகும் என விசாரணை நீதிமன்றம் கருத்துரைத்தது.விசாரணை நீதிமன்றம் இவ்வாறாக கருத்தறிவித்ததாவது:

"3. நான், தரப்பினர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞரால் வைக்கப்பட்ட பணிந்துரையை ஆழ்ந்து பரிசீலித்துள்ளேன். வாதிகள், 18.10.1996-ஆம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட விற்பனையாவண எண் 4425- ஐ நீக்கறவு செய்வதற்கு இவ்வுரிமை வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர். மேலும்,

இவ்வுரிமை வழக்கு 18.10.2013 அன்று தாக்கல் செய்யப் பட்டுள்ளது.உரிமை வழக்கு சுமார் 17 ஆண்டுகள் கழித்து காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது, எனவே, வழக்கு முதல் நோக்கிலேயே காலவரையறை சட்டத்தால் தடை செய்யப்படுகிறது என்று 5-ஆவது பிரதிவாதிக்கான கற்றறிந்த வழக்குரைஞரின் வாதுரையும், வாதிகள் முதல்நோக்கு வழக்கை வைத்திருக்கவில்லை என்று 5-ஆவது பிரதிவாதிக்கான கற்றறிந்த வழக்குரைஞரின் பணிந்துரைகளும், இக்கட்டத்தில் பரிசீலிக்கப்பட இயலாது, இவ்வுரிமை வழக்கு தாக்கல் செய்ததில் கிட்டத்தட்ட 17 ஆண்டுகள் காலதாமதமானதா? இல்லையா? மற்றும் அது காலவரையறையால் தடைசெய்யப்பட்டுள்ளதா? இல்லையா? என்பது விசாரணைக்குட்பட்ட விசயமாகும், மேலும், வாதிக்காதரவாக முதல்நோக்கு வழக்கு ஏதுமில்லை என்பது தொடர்பாக 5-ஆவது பிரதிவாதிக்கான கற்றறிந்த வழக்குரைஞரின் பிற பணிந்துரைகளும் விசாரணைக்குட்பட்ட விசயமாதலால், இவையும் பரிசீலிக்கப்பட இயலாது, அவை சாட்சியமெடுக்கப்பட்ட பிறகுதான் முடிவு செய்யப்பட இயலும்.மேலும், கட்டளை 7, விதி 11-இன் கீழ் விண்ணப்பத்தில் முடிவுவெடுக்கும் சமயத்தில், நீதிமன்றம், வழக்குரையிலுள்ள உறுதிக் கூற்றுகளை மட்டுமே ஆராய வேண்டும் மற்றும் பிரதிவாதியால் எழுப்பப்பட்ட வாதம் அல்லது எதிர்வாதத்தை, கட்டளை 7, விதி 11-இன் கீழ் விண்ணப்பத்தில் முடிவெடுக்கும் கட்டத்தில் கணக்கில்

எடுத்துக்கொள்ளப்பட இயலாது, இவ்வழக்கில் இங்கு வழக்குரையிலுள்ள வாதுரையை ஆராய்வதால் மட்டும், உரிமை வழக்கு காலவரையறைச் சட்டத்தால் தடை செய்யப்பட்டதாக சொல்லமுடியாது.மேலும், 2015 (1) ஜி.எல்.ஒறச்.1 என அறிக்கையிடப்பட்டு, வாதிகளுக்கான கற்றறிந்த வழக்குரைஞரால் மேற்கோள்காட்டப்பட்ட தீர்ப்புவழிச் சட்டம், கையிலுள்ள வழக்கிற்கு முழுமையான ஆதரவளிக்கிறது என்பது எனது பணிவான கருத்தாகும். 2015 (2) ஜி.எல்.ஒறச் .355 மற்றும் பேசார்பாய் ஜவேர்பாய் பட்டேல் மற்றும் ஒருவர் எதிர் ஜாஷ்பாய் உஷிவாபாய் பட்டேல் மற்றும் பலர், 2013 (1) ஜி.எல்.ஆர். 398-இல் அறிக்கை இடப்பட்டு, பிரதிவாதிக்கான கற்றறிந்த வழக்குரைஞரால் மேற்கோள்காட்டப்பட்ட வழக்கு, தற்பொழுதைய வழக்கினை ஆதரிக்கவில்லை, ஏனெனில் இவ்வழக்குகளின் பொருண்மைசார்ந்த நிலையும், தற்பொழுதைய வழக்கும் வெவ்வேறானவையாகும்."

7. வழக்குரையை நிராகரித்ததற்காக, 1-ஆவது எதிர்மேல் முறையீட்டாளர், உ.வி.மு.ச., கட்டளை 7, விதி 11 (டி) -இன் கீழ் அவரது விண்ணப்பத்தை தள்ளுபடி செய்த விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கெதிராக உரிமையியல் சீராய்வு விண்ணப்ப எண் 76/2016-இன் மூலமாக உயர் நீதிமன்றம் முன்பாக வழக்கைக் கொண்டு சென்றார். உயர் நீதிமன்றம், உ.வி.மு.ச., கட்டளை 7, விதி 11 (டி)-இன் கீழ் 1-ஆவது எதிர்மேல்முறையீட்டாளரால் (5-ஆவது பிரதிவாதி) தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித்து, உரிமை வழக்கு

காலவரையறையால் தடைசெய்யப் பட்டது என்ற காண்முடிவின்பேரில் விசாரணை நீதிமன்றத்தின் தீர்முடிவை எதிர்மாறாக்கியது. அவ்வாறு தீர்மானிப்பதற்காக உயர் நீதிமன்றம் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையில் இவ்வாறு கருத்தறிவித்ததாவது:

> "18. வாதிகள் சகோதரிகளாவர் மற்றும் 2013-ஆம் ஆண்டின் உரிமை வழக்கிலுள்ள 1 மற்றும் 2-ஆம் பிரதிவாதிகள் எதிர்வழக்குரையைத் தாக்கல் செய்ய விரும்பவில்லை. அதன்படி, விற்பனையாளர்களான 1 மற்றும் 2-ஆவது பிரதிவாதிகள் தங்களது நிலைப்பாட்டை தெளிவாக்கவில்லை.விற்பனையாவணம் பதிவு செய்யப்பட்டு, சுமார் 20 ஆண்டுகள் கழித்து, வாதிகள் மோசடியான வழக்கு ஒன்றைக் கொண்டுவர விரும்பியுள்ளனர் என்ற உறுதியான சாத்தியத்தை விலக்கப்பட முடியாது.உ.வி.மு.ச., கட்டளை 7, விதி 11-இன் கீழ் விண்ணப்பத்தைப் பரிசீலிக்கும் நிலையில், வழக்குரையின் விவரங்கள் மட்டுமே ஆராயப்படுதல் வேண்டும் என்பது உண்மை.பதிவு செய்யப்பட்ட விற்பனையாவணம் 1996-ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டுள்ளது, அதே ஆவணத்திலேயே வாதிகள் சாட்சிகளாக தங்களுடைய பெருவிரல் பதிவைப் பதித்துள்ளனர் மற்றும் அது, 2013-ஆம் ஆண்டில் எதிர்க்கப்பட நேர்ந்தது என்பது வழக்குரையைச் சாதாரணமாக படிப்பதிலிருந்து தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.அதற்கான காரணத்தை மிகவும் சுற்றிவளைத்துச் சொல்லவேண்டியதில்லை. குஜராத் மாநிலத்தில் நிலத்தின் விலை குறிப்பிடத்தக்க

அளவில் அதிகரித்ததும், சில குடும்ப உறுப்பினர்களால் அத்தகைய வழக்குகளும், கொள்கையற்ற பிற நபர்களால் ஏற்பாடு செய்யப்படும் வழக்குகளும் அவ்வப்போது துவக்கப்படுகின்றன. அதை திட்டமிடுவதற்கும், பல்லாண்டுகளாக அமைதியான சுவாதீனத்தையும், உரிமைமூலத்தையும் அனுபவித்து வருபவர்களான கொள்முதல் செய்பவர்களின் பல கணக்கீடுகளையும் நிலைகுலையச் செய்வதும் சிரமமேயல்ல.இவை மூதாதையர் வழிச் சொத்துகள் என்றும், 7/12 படிவமானது, சீராய்வினர்கள் மற்றும் பிற பிரதிவாதிகளின் பெயர்களைப் பிரதிபலிக்கின்றன என்றுமான காரணத்தின் பேரில் பதிவு செய்யப்பட்ட விற்பனையாவணம் குறித்த வினா எழுப்ப முயற்சியெடுக்கப் பட்டுள்ளது. 1997-ஆம் ஆண்டில் சீராய்வினர் மற்றும் பிற பிரதிவாதிகளின் சார்பாக வனையாவணம் பதிவு செய்யப்பட்ட உடனேயே வருவாய் பதிவும் மாற்றப் பட்டுள்ளது.கிராமத்தின் மாற்று ஆணைப் படிவம், 1997-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 21-ஆம் நாளன்று, அப்பதிவு செய்யப்பட்ட விற்பனையாவணத்தின் அடிப்படையில் செயற்படுத்தப்-பட்டுள்ளது. அதனுடைய நகல் 1997-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ஆம் நாள் வழங்கப்பட்டுள்ளது.அத்தகைய விளக்க இயலா தாமதத்திற்காக, வாதிகள் ஆவணங்களை மெய்ப்பித்து, அவற்றைப் பதிவில் கொண்டு வந்திருக்க வேண்டும்.வாதிகளின் வழக்கு மூன்றாண்டு காலம் கழிந்தபிறகு முன்கொண்டுவரப் பட்டுள்ளதால், அது காலவரையறையால் தடைசெய்யப்படுகிறது என்பதை

பதிவில் கொண்டுவரப்பட்ட ஆவணங்களும் சுட்டிக்காட்டியுள்ளன. வருவாய் அதிகாரி, தற்பொழுதைய சீராய்வினர் மற்றும் பிற எதிர்மனுதாரர்களின் பெயர்களை மாற்றம் செய்தபோதுங்கூட ஆட்சேபணை ஏதும் எழுப்பப்படவில்லை, சுமார் 18 ஆண்டுகள் கழித்து, அத்தகைய ஆட்சேபணைகள் மேலெழும்பி வந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். "

8. உயர் நீதிமன்றத்தின் மேற்குறிப்பிடப்பட்ட தீர்முடிவு மேல்முறையீட்டாளர்களின் (வாதிகளின்) வேண்டுகோளின்படியான இம் மேல்முறையீட்டின் விசயப்பொருளாகும். உரிமை வழக்கு 17 ஆண்டுகள் கழித்து தாக்கல் செய்யப்பட்டது என்ற பொருண்மையால் தடுமாற்றமடைந்து, உயர் நீதிமன்றம் தெள்ளத்தெளிவாகப் பிழை புரிந்துவிட்டது என்பது மேல்முறையீட்டாளர்களின் கூற்றாகும்.அது, உ.வி.மு.ச., கட்டளை 7, விதி 11 (டி)-இன்படி வழக்குரையின் நிராகரித்தலுக்கான விண்ணப்பத்தை ஆராய்வதற்காக, தொடக்க நிலையிலேயே பரிசீலித்தல் என்ற வரம்புக்குட்படாமல் கற்பனைகள் மற்றும் அனுமானங்கள் அடிப்படையில் வழக்கை மேல்நடத்தியுள்ளது. வழக்குரையானது முழுமையாகப் படிக்கப்பட வேண்டும் என்பது நன்கு அறுதியிடப்பட்டுள்ளது என்பதைப் பற்றி சிறிதும் அக்கறைகொள்ளாமல், அது, அதிலுள்ள உறுதிக் கூற்றுகளையும் ஆய்வு செய்யவில்லை, தற்பொழுதைய வழக்கின் பொருண்மைகள்வகையில் உரிமை வழக்கு காலவரையறையால் தடைசெய்யப்பட்டிருக்கின்றது என்ற பொருண்மைத் தொகுதியானது, விசாரிக்கத்தக்கதொரு பிரச்சனையாகும் என விசாரணை நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்ட காரணங்களையுங்கூட குறிப்பிடவில்லை.

9. **மறுபுறத்தில், எதிர்மேல்முறையீட்டாளர்களின் வாதமாவது, மேல்முறையீட்டாளர்களால் தாக்கல் செய்யப்பட்ட உரிமை வழக்கு மோசடியான ஒன்றாக தோன்றுகிறது என்ற பொருண்மையுடன் இணைந்ததொரு கருத்து இருக்கக்கூடிய சாத்தியமுள்ளதால் அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவுக்கூறு** 136-**இன் கீழான அதிகாரவரம்பைச் செயலுறுத்தும் வகையிலான குறுக்கீடு ஏதுமில்லை என்றும், உயர் நீதிமன்றத்தால் வெளிப்படுத்தப்பட்ட கருத்தில் குறைபாடு ஏதுமில்லை என்பதாகும்.** எதிர்வழக்காடும் எதிர்மேல்முறை யீட்டாளர்களின் கூற்றுப்படி, குறிப்பாக 3 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் நீண்ட காலமாக நிலத்தின் தீனத் திலிருந்து வருகின்றனர் அப்பொருண்மையானது, விளைச்சல் நிலத்திலிருந்து தரிசு நிலமாக மாற்றுதல் உட்பட 1997-இல் பதிவு செய்யப்பட்ட மாற்றம் குறித்த பதிவுகளிலிருந்து வலுவூட்டப்படுகின்றன எனும்போது, 1 மற்றும் 2-ஆம் அசல் பிரதிவாதிகளின் சகோதரிகளான மேல்முறை யீட்டாளர்கள், பதிவு செய்யப்பட்ட விற்பனையாவணம் மூலம் நடைபெற்ற நடவடிக்கை குறித்து ஏதும் அறிந்திருக்கவில்லை எனக்கூறுவது சாத்திய-மற்றதாகும். எதிர்வழக்காடும் எதிர் மேல்முறையீட்டாளர்களின் கூற்றுப்படி, இம்மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்பதாகும்.

10. நாங்கள், மேல்முறையீட்டாளர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. பர்விஷ் ஜீதேந்திர மல்கான் மற்றும் எதிர்வழக்காடும் எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. கௌரவ் அகர்வால் ஆகியோரின் வாதங்களைக் கேட்டோம்.

11. வழக்குரையிலுள்ள கூற்றுகளையும், விசாரணை நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்ட காரணங்களையும் ஆழ்ந்தாராய்ந்த பிறகு, தற்பொழுதைய வழக்கின் பொருண்மைசார்ந்த நிலையில், உரிமை வழக்கு காலவரையறையால் தடை செய்யப்பட்டிருக்கிறது என்ற பொருண்மைத் தொகுதி விசாரிக்கத்தக்கதொரு பிரச்சனையாகும் என விசாரணை நீதிமன்றத்தால் எடுக்கப்பட்ட கருத்தை · திர் மறையாக்கியதில் உயர் நீதிமன்றம் தெள்ளத் தெளிவாகப் பிழை புரிந்துவிட்டது என்பதில் எங்களுக்கு எவ்வித ஐயமுமில்லை. மேல்முறையீட்டாளர்கள் (வாதிகள்) தங்களது மூதாதையர்வழிச் சொத்து தொடர்பான பதிவு செய்யப்பட்ட விற்பனையாவணம் நிறைவேற்றப்பட்டதைக் குறித்த எதையுமே 2013 வரையில் தாங்கள் அறிந்திருக்கவில்லை என உறுதியாகக் கூறியுள்ளனர் என்பதால்தான் நாங்கள் அவ்வாறு கூறுகிறோம்.மேலும், அவர்கள், அவர்களுக்குரிய பதிவு செய்யப்பட்ட விற்பனை ஆவணத்தின் மீதான பெருவிரல் பதிவுகளையும் மறுத்து, சாட்டுரைக்கப்பட்ட மோசடி கையொப்பத்தையும், ஆள்மாறாட்டத்தையும் குறித்து தெரிவித்துள்ளனர்.வழக்குரையிலுள்ள ஒட்டுமொத்த கூற்றுகளையும், கோரப்பட்ட பரிகாரங்களையும் பொறுத்தவரையில், காலவரையறைச் சட்டத்தின் பிரிவுக்கூறுகள் 56, 58, 59, 65 அல்லது 110 அல்லது வேறேதேனும் பிரிவுக்கூறுகளுள் எவை, தற்பொழுதைய வழக்கின் பொருண்மைகளுக்குப் பொருந்தத்தக்கதென்பது, பரிசீலனைக்குரிய நிலையில் எடுத்துக்கொள்ளப்படலாம்.

12. கட்டளை 7, விதி 11 (டி)-இன் கீழான விண்ணப்பத்தைப் பொறுத்தவரையில், பிரச்சனைக்குரிய விசயத்தில் விடை காண்பதற்கு எது உகந்ததென்றால், வழக்குரையிலுள்ள கூற்றுகளை ஆராய்வதேயாகும். வழக்குரை முழுமையாகப் படிக்கப்பட வேண்யடிதாகிறது. பிரதிவாதிகள் செய்யக்கூடிய எதிர்வாதம் அல்லது எதிர்வழக்குரையில் அவர்களால் எடுக்கப்பட்ட வாதம் அல்லது அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பம் எதுவும், கட்டளை 7, விதி 11 (டி)-இன் கீழான விண்ணப்பத்தை முடிவுசெய்வதற்கு அடிப்படையாக இருக்க இயலாது.வழக்குரையிலுள்ள கூற்றுகள் மட்டுமே பொருந்தத்தக்கவை. பதிவு செய்யப்பட்ட விற்பனையாவணம் 1996-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 18-ஆம் தேதியிடப்பட்டதாகும் என்பது பொதுவான காரணமாகும். சாதாரணமாக விற்பனை ஆவணம் பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்தே பதிவு செய்யப்பட்ட விற்பனையாவணத்தை எதிர்ப்பதற்கான காலவரையறை துவங்கும்.எனினும், மேல்முறையீட்டாளர்களின் (வாதிகளின்) குறிப்பிட்ட வழக்குவிவரம் யாதெனில், அவர்களுடைய சகோதரர்களான 1 மற்றும் 2-ஆம் அசல் பிரதிவாதிகளால் ஜெய்கிருஷ்ணபாய் பிரபு தாஸ் தாக்கர் அல்லது 1 மற்றும் 2-ஆம் பிரதிவாதிகள் சார்பாக அந்த விற்பனையாவணம் நிறைவேற்றியதைக் குறித்து எதுவுமே அவர்கள் 2013-ஆம் ஆண்டுவரையில் அறியவில்லை என்பதாகும்.அவர்கள் 26.12.2012 அன்று அதைப்பற்றி அறிந்தவுடனேயே, பதிவு செய்யப்பட்ட விற்பனை ஆவணத்தின் சான்றிட்ட நகலைப்பெற நடவடிக்கைகள் எடுத்து, அதனைப் பெற்றபிறகு, மூதாதையர் வழிச் சொத்து தொடர்பாக, அவர்களுடைய சகோதரர்களால் அவர்கள்மீது நடத்தப்பட்ட மோசடியை அவர்கள் உணர்ந்துகொண்டனர் மற்றும் உரிமை வழக்கு தாக்கல் செய்வதற்கு

இரண்டு நாட்களுக்கு முன்னதாக, அவர்களுடைய சகேதர்களை (1 மற்றும் 2-ஆம் அசல் பிரதிவாதிகள்) அணுகி, தங்களுடைய சுவாதீனத்தில் குறுக்கிடுவதை நிறுத்திக்கொள்ளவும், சொத்தைப் பாகப்பிரிவினை செய்து, அவர்களுடைய பங்குக்குரிய நிலத்தின் அரை (1/2) பகுதியை பெயர்க் குறிப்பிட்டு தனிப்பட்ட உடைமையினை வழங்கவும் அவர்களை கேட்டுக்கொண்டனர். எனினும், 1 மற்றும் 2-ஆம் அசல் பிரதிவாதிகள், அவர்களுடைய வேண்டுகோளுக்கு செவிசாய்க்காததால், அவர்களுக்கு நீதிமன்றத்தை அணுகுவதைத் தவிர வேறுவழியில்லாததால், அதிலிருந்து இருதினங்களுக்குள் அவ்விசயத்திற்காக உரிமை வழக்கைத் தாக்கல் செய்தனர். மேல்முறையீட்டாளர்களின் கூற்றுப்படி, பதிவு செய்யப்பட்ட விற்பனையாவணம் நிறைவேற்றியதைக் குறித்து அறிந்த பிறகு, உரிய காலத்திற்குள் உரிமை வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதாகும்.அது விசாரிக்கத்தக்க பிரச்சனையென்று விசாரணை நீதிமன்றம் கருத்து தெரிவித்து, கட்டளை 7, விதி 11 (டி) -இன் கீழ் வழக்குரையை நிராகரித்தலுக்காக-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரால் (5-ஆம் பிரதிவாதி) தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தை ஏற்க மறுத்தது. அக்கருத்து எங்களின் பாராட்டுக்குரியதாகும்.

13. அதற்கு மாறாக, உயர் நீதிமன்றம், 19 பத்திகள் வரையிலும் செல்லக்கூடிய காரணமுறையான ஆணையரையை வழங்கியுள்ளபொழுதிலும், வழக்குரையிலுள்ள கூற்றுகளை ஆய்வு செய்வதற்கு ஒருசிறிதும் அக்கறை காட்டாமலேயே வழக்கை கற்பனைகள் மற்றும் ஊகங்களின் அடிப்படையில் பரிசீலித்துள்ளது. அது ஒரு பத்தியில் பிரச்சனைக்கு விடைகாண முயற்சி செய்துள்ளது,

அது இந்நேரம்வரை (7-ஆவது பத்தியில்) மீண்டும் எடுத்துரைக்கப் பட்டுள்ளது. அதற்கு மாறாக, விசாரணை நீதிமன்றத்தின் அணுகுமுறையானது, **சலீம் பாய் மற்றும் பலர் -எதிர் மகாராஷ்டிர மாநில அரசு மற்றும் பலர், 2003 (1) எஸ்.சி.சி. 557; மாயர் (ஹெறச்.கே.) லிமிடெட் மற்றும் பலர் எதிர்-ஓனர்ஸ் & பார்டீஸ், வெசல் எம்.வீ. பார்சியூன் எக்ஸ்பிரஸ் மற்றும் பலர், 2006 (3) எஸ்.சி.சி. 100; மேலும், டி. அறிவானந்தம்-எதிர்-டி.வி.சத்யபாய் மற்றும் ஒருவர், 1977 (4) எஸ்.சி.சி. 467** போன்றவற்றில் விளக்கப்பட்ட அறுதியான சட்டநிலையுடன் ஒருமித்திருந்தது.

14. **இத்தீர்முடிவுகள், சர்ச் ஆஃப் கிரைஸ்ட் சேரிடபள் டிரஸ்ட் அண்டு எஜுகேஷனல் சேரிடபள் சொசைட்டி -எதிர்-பொன்னியம்மன் எஜுகேஷனல் டிரஸ்ட், 2012 (4) சி.டி.சி. 308 (எஸ்.சி.): 2012 (2) எம்.டபிள்யூ.என்.(சிவில்) 662 (எஸ்.சி.): 2012 (8) எஸ்.சி.சி. 706 என்ற வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளன, அதில் இந்நீதிமன்றம்** 11-**ஆவது பத்தியில் இவ்வாறு கருத்தறிவித்ததாவது**:

> "11. இந்த நிலைப்பாடானது, சலீம் பாய்-எதிர் மகாராஷ்டிர மாநில அரசுஇல் இந்நீதிமன்றத்தால் விளக்கப்பட்டது. அதில் சட்டத்தின் கட்டளை 7, விதி 11-ஐ பரிசீலிக்கையில் கீழ்வருமாறு தீர்மானிக்கப்பட்டதாவது: (எஸ்.சி.சி. பக்கம் 560, பத்தி 9)
>
> "9. உ.வி.மு.ச., கட்டளை 7, விதி 11-இன் கீழ் விண்ணப்பத்தில் முடிவெடுக்கப்படுவதற்காக ஆராயப்படவேண்டியதற்குரிய பொருண்மைகள் வழக்குரையிலுள்ள கூற்றுகளே என்பது அதனை

பார்வையிட்டாலே தெளிவாகிவிடும்.விசாரணை நீதிமன்றமானது, விசாரணையை முடிப்பதற்கு முன்பாக எச்சமயத்திலேனும் வழக்குரையைப் பதிவு செய்வதற்கு முன்பாகவே அல்லது பிரதிவாதிக்கு அழைப்பாணைகளை அனுப்பிய பிறகோ, உரிமை வழக்கின் எந்த நிலையிலும், உ.வி.மு.ச., கட்டளை 7, விதி 11-இன் கீழான அதிகாரத்தைச் செலுத்தலாம். உ.வி.மு.ச., கட்டளை 7-இன் விதி 11-இன் கூறுகள் (ஏ) மற்றும் (டி)-இன் கீழ் விண்ணப்பமொன்றைத் தீர்மானிக்கும்பொருட்டு, வழக்குரையிலுள்ள கூற்றுகள் பொருத்தமுடையனவாகவும், எதிர்வழக்குரையில் பிரதிவாதியால் எடுக்கப்பட்ட வாதங்கள் அந்நிலையில் முற்றிலும் பொருத்தமற்றவையாகவும் இருக்குமானால், உ.வி.மு.ச., கட்டளை 7, விதி 11-இன் கீழ் விண்ணப்பத்தில் முடிவெடுக்காமல் எதிர் வழக்குரையைத் தாக்கல் செய்ய பணிப்பது நடைமுறைசார்ந்த முறைகேடாக இருக்குமேயன்றி, விசாரணை நீதிமன்றத் தாலான ஆள்வரை செயலுறுத்தத்தை நிறைவேற்றியதாகாது."

கட்டளை 7, விதி 11-ஐ பரிசீலிக்கும் பொருட்டு, வழக்குரையிலுள்ள கூற்றுகளை நீதிமன்றம் ஆராய வேண்டும் மற்றும் அது, உரிமை வழக்கின் எந்நிலையிலும் விசாரணை நீதிமன்றத்தால் செயலுறுத்தப்படலாம் என்பது தெளிவு.எதிர்வழக்குரையிலுள்ள கூற்றுகள் முக்கிய மற்றவை என்பதும் தெளிவாகிறது மற்றும் வழக்குரையிலுள்ள கூற்றுகளை/வாதங்களை ஆராய்வது

நீதிமன்றத்தின் கடமையாகும். அதாவது, அத்தகையதொரு விண்ணப்பத்தில் முடிவெடுப்பதற்கு எது ஆராயப்பட வேண்டுமென்றால் வழக்குரையிலுள்ள கூற்றுகளேயாகும். இந்நிலையில் எதிர்வழக்குரையில் பிரதிவாதியால் வைக்கப்படும் வாதங்கள் முற்றிலும் பொருத்தமற்றவையாகும் மற்றும் வழக்கு, வழக்குரை கூற்றுகளின்பேரில்தான் முடிவு செய்யப்படவேண்டும். இக்கோட்பாடுகள் **ரேப்டாக்கோஸ் பிரட் & கம்பெனி லிமிடெட் -எதிர்-கணேஷ் புரோபர்ட்டி; மற்றும் மாயர் (உறச்.கே.) லிமிடெட் -எதிர்-வெசல் எம்.வி. பார்சியூன் எக்ஸ்பிரஸ்**-இல் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளன. "

15. **உயர் நீதிமன்றம் (மேற்கண்ட) சர்ச் ஆஃப் கிரைஸ்ட் சேரிடபள் டிரஸ்ட் அண்டு எஜுகேஷனல் சேரிடபள் சொசைட்டி என்ற வழக்கை குறிப்பிட்டு, அதில் வழக்குரையானது, பிரதிவாதி என்றமுறையில் வழக்குமூலம் எதனையும் வெளிப்படுத்தவில்லை என்ற காரணத்தின்பேரில், அந்த ஒரு பிரதிவாதிக்கு எதிராக பகுதியாக வழக்குரையை நிராகரித்து உத்தரவிட்டதில் உயர் நீதிமன்றத்தால் எடுக்கப்பட்ட கருத்தின் சரித்தன்மையைப் பரிசீலிக்கும் சந்தர்ப்பம் வாய்த்தது**. உயர் நீதிமன்றம், (மேற்கண்ட) **மாயர் (உறச்.கே.) லிமிடெட் மற்றும் பலர்** என்ற வழக்கில், எதிர்வழக்காடும் எதிர் மேல்முறையீட்டாளர்களால் சார்ந்துநிற்கப்பட்ட தீர்முடிவினையும் குறிப்பிட்டு, உ.வி.மு.ச.,-இன் கட்டளை 7, விதி 11 (டி)-இன் கீழ் வழக்குரையை நிராகரிக்க, நீதிமன்றத்தின் அதிகாரவரம்பு குறித்த அறுதியான சட்டநிலையை திரும்ப எடுத்துரைத்துள்ளது.

16. தற்போதைய வழக்கில், 1 மற்றும் 2-ஆம் அசல் பிரதிவாதிகளால், வாதிகள் அறியாவண்ணம் மோசடியாக

விற்பனையாவணம் நிறைவேற்றப்பட்டு, அந்த நிறைவேற்றத்தைக் குறித்து அறிந்தவுடன், மேல்முறையீட்டாளர்களின் மூதாதையர்வழிச் சொத்தின் புழங்குரிமையும், சுவாதீனத்தையும் அமைதியாக அனுபவித்துவருவதில் குறுக்கிடுவதை நிறுத்தக் கோரியதற்கு 1 மற்றும் 2-ஆம் அசல் பிரதிவாதிகளால் மறுப்புத்தெரிவிக்கப்பட்ட இரு தினங்களுக்குள்ளாகவே மேல்முறையீட்டாளர்கள் (வாதிகள்) உரிமை வழக்கைத் தாக்கல் செய்ததாக உறுதிபடக் கூறியுள்ளனர் என நாங்கள் அறிகிறோம்.தற்பொழுதைய வழக்கின் பொருண்மைகள் வகையில், உரிமை வழக்கு காலவரையறையால் தடை செய்யப்பட்டிருப்பது தொடர்பான பிரச்சனையானது, விசாரிக்கத்தக்க பிரச்சனையாகும் என்ற காரணத்திற்காக வழக்குரையானது, கட்டளை 7, விதி 11 (டி)-இன் கீழ் அதிகாரத்தைச் செயலுறுத்தும்வகையில், தொடக்கநிலையிலேயே நிராகரிக்கப்பட இயலாது என்று விசாரணை நீதிமன்றத்தால் எடுக்கப்பட்ட கருத்தை நாங்கள் உறுதி செய்கிறோம்.

17. மேற்படியாக விரிவான மதிப்பீடு செய்ததில், கட்டளை 7, விதி 11 (டி) -இன் கீழ் 1-ஆவது எதிர்மேல் முறையீட்டாளரால் (5-ஆவது பிரதிவாதி) தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தை (சா.ஆ .21) நிராகரிக்கின்ற விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவை மீட்டளித்து, உயர் நீதிமன்றத்தால் எடுக்கப்பட்ட கருத்தை எதிர் மறையாக்குவதில் எங்களுக்கு எந்தத் தயக்கமுமில்லை.அதன் விளைவாக, வழக்குரையானது, சட்டப்படி மேல்நடத்துவதற்காக அனந்த் iv-ஆவது கூடுதல் உரிமையியல் நீதிபதியின் கோப்பிலுள்ள அசல் எண்ணுக்கு மீட்டளிக்கப்பெறுகிறது. பத்தி 5-இல் எடுத்தளிக்கப்பட்ட, 2016-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 20-ஆம் நாளிட்ட, சா.ஆ .17-இன்படியாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவை, விசாரணை நீதிமன்றம்

விவாதத்திற்குரியதாக எடுத்துக்கொண்டு, அது பிரதிவாதிகளுள் எவரேனும் ஒருவரின் வேண்டுகோளின்படி எதிர்க்கப்படாமலிருந்தால் அதனை செயற்படுத்த வேண்டும் என்பதை நாங்கள் மேலும் தெளிவாக்குகிறோம். அதற்குட்பட்டு, அவ்வுத்தரவானது சட்டத்திற்கிணங்க விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்.

18. **அதன்படி, இம்மேல்முறையீடு வெற்றி யடைகிறது மற்றும் அது மேற்படியான நிபந்தனைகளுடன் செலவுத்தொகை குறித்த உத்தரவு ஏதுமின்றி அனுமதிக்கப்படுகிறது.**

மாண்புமிகு தலைமை நீதியரசர் தீபக் மிஸ்ரா
மாண்புமிகு நீதியரசர் ஏ. எம். கான்வில்கர்
மாண்புமிகு நீதியரசர் டாக்டர் டி. ஒய். சந்திரசூட்

புதுதில்லி

ஏப்ரல் 10, 2018.

<u>உரிமைத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."